சார்பு நீதிமன்றம் , பெருந்துறை , ஈரோடு மாவட்டம்.

முன்னிலை: திரு பா.சரவணன்,பி.எஸ்ஸி.பி.எல்.,

சார்பு நீதிபதி,பெருந்துறை.

2020 ம் ஆண்டு மார்ச் மாதம் 13—ம் நாள் வெள்ளிக்கிழமை

**உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டு வழக்கு எண்.1/2018**

1.பழனிச்சாமி(இறந்துவிட்டார்)

(வ.ம.எண்.3/2019ல் 4.12.2019 தேதியிட்ட
உத்தரவின்படி திருத்தப்பட்டது)
2.சுப்ரமணி

மேல்முறையீட்டாளர்கள்/

எதிர்மனுதாரர்கள்

/ எதிர்/

1.எ.ஆர்.கிருஷ்ணசாமி
2. பர்வதம்
3.கோகுல்ராஜ்
4.வசந்தாமணி
5.அருக்காணி
6.ராமாயி
(2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் வ.ம.எண்.1/2019ல் 13.6.2019
தேதியிட்ட உத்தரவின்படி சேர்க்கப்பட்டு, வ.ம.எண்.3/2019ல்
4.12.2019 தேதியிட்ட உத்தரவின்படி திருத்தப்பட்டது)

எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்/
1ம் மேல்முறையீட்டாளரின் வாரிசுகள்

இந்த உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டு மனு, பெருந்துறை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வ.ம.எண்.804/2017ல் அ.வ.எண்.183/2017ல், 6.01.2018 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் உத்தரவாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மனுவின் தரப்பினர்கள் :</u>

1.எ.ஆர்.கிருஷ்ணசாமி மனுதாரர்/வாதி

/எதிர்/

1.பழனிச்சாமி
2.சுப்ரமணி எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இந்த இந்நீதிமன்றம் முன்பாக 04.03.2020 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.எஸ்.செந்தில்குமார் அவர்களும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.திருமலை அவர்களும் ஆஜராகியும், மற்ற எதிர்மனுதாரர்கள் அழைக்கப்பட்டு வருகை தராததால் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும்,இருதரப்பு வாதுரைகளை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை எனது சீரிய பரிசீலனையிலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

## தீர்ப்புரை

1. மேல்முறையீட்டாளர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில், இந்த உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டு மனு, உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 104 வகுமுறை 43 விதி 1ன் கீழ், பெருந்துறை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வ.ம.எண்.804/2017ல் ல் அ.வ.எண்.183/2017ல், 6.1.2018 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் உத்தரவாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. விசாரணை நீதிமன்றத்தில், வ.ம.எண்.804/2017 மனுவானது, மனுதாரர்/வாதி தரப்பில், உரிமையியல் நடைமுறைச்சட்டம் வகுமுறை 39 விதி 1,2 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனு பட்டிகை சொத்தில், 'மனுதாரர்/வாதி, பொதுபாதையை பயன்படுத்துவதையும், நிலத்தின் அடியில் பதிக்கப்பட்டுள்ள குழாய் வழியாக, தனது நிலங்களுக்கு தண்ணீர் எடுத்துச்செல்வதையும், எதிர்மனுதாரர்களோ, அவர்களது ஆட்களோ அசல் வழக்கு முடியும் வரை இடையூறு செய்யக்கூடாதென்று இடைக்கால தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து, அந்த மனு விசாரணை நீதிமன்றத்தால், அனுமதிக்கப்பட்டதை எதிர்த்து, இந்த பல்வகை மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.விசாரணை நீதிமன்றத்தில், வ.ம.எண்.804/2017ல் மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள ஆணையுறுதி பத்திரத்தின் சுருக்கம் :**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் 'கோரி வாதியால், பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு புங்கம்பாடி கிராமத்தில், ரீ.ச.எண்.91/6ல் நிலம் உள்ளது. 1,2

எதிர்மனுதாரர்கள் முறையே தந்தை மற்றும் மகன் ஆவார்கள். அவர்களுக்கு மேற்படி கிராமத்தில், ரீ.ச.எண்.87/4 மற்றும் 5ல் நிலம் உள்ளது. அது மனுதாரரின் நிலத்திற்கு தென்புறமாக அமைந்துள்ளது. ரீ.ச.எண்.91/6ஜெ அடைவதற்கு, 5 லிஸ்ஸ் அகலம் கொண்ட பாதை, ரீ.சர்வே எண்.87/4,5க்கு தென்புறத்தில் தொடங்கி, ரீ.ச.எண்.91/6ஜெவந்து அடையுமாறு ஏற்படுத்தப்பட்டது. அதனடிப்படையில், நிலங்களுக்கு பாசனம் ஏற்படுத்தும் வகையில், நிலத்தின் அடியிடில் ஒரு குழாய் அமைக்கப்பட்டது. மேற்படி 5 லிங்க்ஸ் பாதை, அதிலுள்ள குழாய் தொடர்பாக 27.05.1982 தேதியில் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி, மேற்படி பாதை மற்றும் அதிலுள்ள குழாயை பயன்படுத்த மனுதாரருக்கு உரிமை உள்ளது. அதில் மனுதாரருக்கு ½ பங்கும், எதிர்மனுதாரர்களுக்கு ½ பங்கும் உள்ளது. எதிர்மனுதாரர்கள், தாவாச்சொத்திற்கு கிழக்கில், 7 அடி ஆழமுள்ள , தங்கள் நிலத்தில் உள்ள பகுதியை 10அடி அகலமுள்ள ரோடாக மாற்றி, 25.09.2003 அன்று 2ம் எதிர்மனுதாரரின் மகள்களோடு ஒரு உடன்படிக்கை செய்துள்ளார்கள். அதில் மனுதாரரின் உரிமையையும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். எதிர்மனுதாரர்கள் 27.05.1982 தேதியிட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்து செய்துள்ளதால், அதற்கு முரணாக செயல்படமுடியாது. மனுதாரரின் நிலத்தை குறைந்த விலைக்கு கேட்டு மனுதாரர் தராததால், அந்த பாதையையும் நிலத்தடி குழாயையும் மனுதாரர் பயன்படுத்துவதில் இடையூறு செய்தார்கள். அவ்வாறு செய்ய அவர்களுக்கு உரிமை இல்லை. எதிர்மனுதாரர்களின் செயலை மனுதாரர் அருகில் இருந்தவர்களின் உதவியுடன் தடுத்துவிட்டார். மனுதாரருக்கு, முதல்நிலை வழக்கும் சமநிலை வாய்ப்பும் சாதகமாக உள்ளது. எனவே, மனுவில் கோரியபடி உத்தரவாக வேண்டும்.

**4.விசாரணை நீதிமன்றத்தில், வ.ம.எண்.804/2017ல் 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து, 1ம் எதிர்மனுதாரர் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்:**

மனு அபிடவிட்டில் கூறியுள்ள சங்கதிகள் உண்மையல்ல. பிராது சொத்து விவரம் சரியானதல்ல. மனுதாரருக்கு சொத்தில் பாதி பாகம் மட்டுமே உள்ளது. ஆனால் அவர் ஏதோ முழுச்சொத்தும் தனது போல் மனு தாக்கல் செய்துள்ளார். அது ஏற்புடையதல்ல. மனுதாரருக்கு சொந்தமான கிணறு, எதிர்மனுதாரர்களின் கிணற்று தென்புறமாக உள்ளது. 2 கிணறுகளுக்கும் இடையே 350 அடி தூரம் இருக்கும். 1982ம் வருட வாக்கில், 1,2 எதிர்மனுதாரர்கள் தங்கள் நிலத்தில், குழி தோண்டி, ஒரு பைப்லைன் அமைத்தார்கள். மனுதாரருக்கு அவரது சொத்துக்கு பாசனம் செய்ய வேறு வழி இல்லாததால், இந்த

எதிர்மனுதாரரிடம் பைப்லைனை பயன்படுத்த அனுமதி கேட்டார். அதற்கு இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டு ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதுநாள் வரை மனுதாரரும், எதிர்மனுதாரர்களும் அமைதியான முறையில் அனுபவித்து வந்தனர். மனுதாரர், எதிாமனுதாரர்களின் நிலத்தை குறைந்த விலைக்கு கேட்டு, அதற்கு எதிர்மனுதாரர்கள் மறுத்து விட்டதால், பிரச்சனை ஏற்பட்டது. எனவே, பொது மனிதர்கள் மூலம் பைசல் பேசப்பட்டது. அவர்கள், தண்ணீர் பாய்ச்சுவதில் முறை வைத்து தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளலாம் என்று கூறினார்கள். எனவே. அதற்கான பரிகாரம் கேட்காமல், வெறும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளது ஏற்புடையதல்ல. மேற்படி பொது பைப்லைனை இருதரப்பினரும் ஒரே சமயத்தில் பயன்படுத்த முடியாது. மேற்படி ஒப்பந்தத்திற்கு முரணாக உண்மை விவரங்களை மறைத்து, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ளது. மேலும, ஒரு கூட்டுரிமையாளர், மற்றொரு கூட்டுரிமையாளருக்கு எதிராக உறுத்துக்கட்டளைகோர முடியாது. இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரருக்கு, முதல்நிலை வழக்கும், சமநிலை வாய்ப்பும் சாதகமாக இல்லை. அது எதிர்மனுதாரர்களுக்கு சாதகமாக உள்ளது. ஆகவே, இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

<u>5. உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டிற்கான காரணங்களின் சுருக்கம் :</u>

விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் உத்தரவாணை சட்டத்திற்கும், சாட்சியங்களுக்கும் முரணானது. மேற்படி மனுவை அனுமதித்தது தவறு. விசாரணை நீதிமன்றம் சொத்து விவரத்தில் தவறு இருந்தது என்பதை கருத்தில் கொள்ளவில்லை. மனுதாரர்தான் எதிர்மனுதாரர்கள் பொது பைப்லைன் பயன்படுத்துவதை இடையூறு செய்தார் என்பதை கருத்தில் கொள்ளவில்லை. பொது பைப்லைன் பயன்படுத்துவதற்க மனுதாரர் முறைநாள் வைத்து அதை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையும் விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை. எனவே, முறைநாள் வைக்காமல் ஒரே சமயத்தில் பொது பைப்லைனை பயன்படுத்த முடியாது என்பதை கருத்தில் கொள்ளவில்லை. மேலும், கூட்டுரிமையாளருக்கு எதிராக உறுத்தக்கட்டளை வழங்க முடியாது என்பதையும் கருத்தில் கொள்ளவில்லை. எனவே, விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவை ரத்து செய்து, இந்த மேல்முறையீட்டை அனுமதிக்கவேண்டும்.

6. **<u>இந்த பல்வகை மேல்முறையீட்டு மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனைகள் :</u>**

1. 1ம் எதிர்மனுதாரர்/1ம் எதிர்மேல்முறையீட்டாளர்/வாதிக்கு முதல்நிலை வழக்கும், சமநிலை வாய்ப்பும் உள்ளதா?

2. 1ம் எதிர்மனுதாரர்/1ம் எதிர்மேல்முறையீட்டாளர்/வாதிக்கு இடைக்கால தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது சரியானதா?

3. விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் உத்தரவாணை ரத்து செய்யத் தக்கதா?

4. இந்த பல்வகை மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

5. வேறு என்ன பரிகாரம் மேல்முறையீட்டாளர்களுக்கு கிடைக்கத்தக்கது?

7. இந்த பல்வகை மேல்முறையீட்டில் விவாதிக்க வசதியாக இருக்கும்பொருட்டு, விசாரணை நீதிமன்றத்தில், வழக்கு தரப்பினர்களின் தகுநிலையே இந்த மேல்முறையீட்டிலும் எடுத்தாளப்படுகிறது. 1ம் மேல்முறையீட்டாளர் இறந்து விட்டார். அவரது வாரிசுகள் இந்த பல்வகை மேல்முறையீட்டு மனுவில், தன்னுடன் ஒத்துழைக்கவில்லை என்று 2ம் மேல்முறையீட்டாளர் தரப்பில் கூறி, அவர்களை 2 முதல் 6 கூடுதல் எதிர்மேல்முறையீட்டாளர்கள்/எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

8. **<u>பிரச்சனை எண்கள் 1 முதல் 4 :</u>**

_ மேற்படி 4 பிரச்சனைகளிலும் தீர்வு காணவேண்டிய பிரச்சனை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதால், அவற்றுக்கு ஒருசேர விடையளிக்க வேண்டியுள்ளது.

9. மனுதாரர்/ வாதி, அசல்வழக்கை எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்துள்ளார். பொதுவாக, உரிமையியல் நடைமுறைச்சட்டம் வகுமுறை 39 விதி 1,2 மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்படும் இடைக்கால தடையுறுத்தக்கட்டளை கோரும் மனுக்களை அனுமதிப்பதற்கு, அந்த மனுவில் மனுதாரருக்கு முதல்நிலை வழக்கும், சமநிலை வாய்ப்பும் சாதகமாக உள்ளதா? என்பதையும், தற்காலிக தடையுறுத்துக்கட்டளை வழங்கப்படாவிட்டால், மனுதாரருக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளதா? என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

10. மனுதாரர் தரப்பில், விசாரணை நீதிமன்றத்தில், மேற்படி மனுவில் மசாஆ1முதல் மசாஆ6 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் விசாரணை நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மனுச்சொத்தாக, விசாரணை நீதிமன்றத்தில், பெருந்துறை தாலூக்கா, புங்கம்பாடி கிராமம், க.ச.87/4 நெ.பு.ஹெ.0.51.0 தரம் 1.72 க.ச.87/5 நெ.பு.ஹெச.0.18.5 தரம் 0.63 ஆக மொத்தம் பு.ஹெ.0.69.5 தரம் 2.35 இதன் மத்தியில் உள்ள 5 லிங்ஸ் அகலம் 935 லிங்ஸ் நீளம் உள்ள தடம் மற்றும் அதில் நிலத்திற்கடியில் பதிக்கப்பட்டுள்ள பைப்லைன் தொடர்பாக இடைக்கால தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக, மனுதாரர்/வாதி மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடையே , 27.05.1982 ம் தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட தட பாத்திய உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது என்பது இருதரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் மசாஆ1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11. மசாஆ1 ஆக தாக்கல் செய்யப்பட்ட 27.05.1982 ம் தேதிய தட பாத்திய உடன்படிக்கையை பரிசீலிக்கையில், அதில், மனுதாரர்/வாதி கிருஷ்ணசாமியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளான பழனிச்சாமி மற்றும் சுப்பரமணி ஆகியோர் சேர்ந்து எழுதி கொண்டுள்ளார்கள். அதில், 5 லிங்க்ஸ் அகலம் கொண்ட தடம் மற்றும் பூமிக்கடியில் பதிக்கப்பட்ட பைப்லைன் ஆகியவற்றில் மனுதாரருக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் பொதுவில் தலா ½ பாகம் பாத்தியம் உள்ளது என்பது தெரிகிறது. ஆனால், அதற்கு பின்னிட்டு, 29.5.2003ல் ஒரு பாகம் ஏற்பட்டதாகவும், அதில் பாதையை அகலப்படுத்தி, பயன்படுத்தும் உரிமை தொடர்பாக, சில விவரங்கள் கூறப்பட்டிருந்ததாகவும், மனுதாரர்/வாதி தரப்பில் கூறப்பட்டுள்ளது. எனினும், மேற்படி 29.05.2003 தேதிய மசாஆ2 ஆவணம் தொடர்பாகவும், அது தரப்பினர்களை கட்டுப்படுத்தும் தன்மை தொடர்பாகவும், இருதரப்பிலும் சாட்சியங்களை முன்னிட்ட பிறகு, அசல் வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில்தான் தீர்மானிக்க முடியும்.

12. மேல்முறையீட்டாளர்கள்/ எதிர்மனுதாரர்கள் தரப்பில், இருவருக்கும் பொதுவான மேற்படி பாதை மற்றும் அதில் பதிக்கப்பட்டுள்ள பைப்லைனை

பொறுத்து ஒரு கூட்டுரிமையாளர் மற்றொரு கூட்டுரிமையாளருக்கு எதிராக உறுத்துக்கட்டளை கோரமுடியாது என்று கூறுப்பட்டது. ஆனால்,பொது பாதை மற்றும் பொது பைப்லைனை அனுபவிப்பதைப் பொறுத்து, ஒரு கூட்டுரிமையாளர் மற்றொருவரின் உரிமையை மறுக்காமலும் அவருக்கு இடையூறு செய்யாமலும், தனது பொது உரிமையின்படி, மேற்படி பொதுபாதையை மற்றும் பொது பைப்லைனை பயன்படுத்திகொள்ள உரிமை உள்ளது. அதற்கு இடையூறு செய்யப்படும் நிலையில், மேற்படி பொது ஒப்பந்தத்தின் அடிப்படையில்; தனது உரிமையை பாதுகாக்க வழக்கு தாக்கல் செய்ய முடியும். மேலும், மேல்முறையீட்டாளர் தரப்பில், மேற்படி பொது பைப்லைன் வழியாக, தண்ணீர் பாய்ச்சுவது தொடர்பாக, முறைநாள் ஏற்படுத்துவது தொடர்பாகத்தான் மனுதாரர் பரிகாரம் கோரியிருக்கவேண்டுமென்று மேல்முறையீட்டாளர்கள் / எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டது. மனுதாரர் தனது மனுவில், 5 லிங்ஸ் அகலம் உள்ள தடம் மற்றும் பொது பைப்லைன் ஆகியவற்றில் தனக்கு பாதி பாகம் உள்ளது என்பதையும் எதிர்மனுதாரருக்கு பாதி பாகம் உள்ளது என்பதையும் என்று பிரமாணப்பத்திரிக்கை பத்தி 5ல் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே, மனுதாரர் கோரியவாறு முழுமையாக மனுவை அனுமதித்தால், பைப்லைனை மற்றொரு கூட்டுரிமையாளரான மேல்முறையீட்டாளர் பயன்படுத்த இயலாமல் போய்விடும் என்ற 2ம் மேல்முறையீட்டாளர் தரப்பு வாதம் ஏற்புடையதாக உள்ளது.

13. எனவே, நீதியின் நலன் கருதி, அசல் வழக்கு முடியும் வரை, 27.05.1982 ம் தேதியில் ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட தட பாத்திய உடன்படிக்கைபடி, 5 லிங்ஸ் அகல தடத்தை அந்த ஒப்பந்தத்தில் கண்ட தரப்பினர்கள் மற்றும் அவர்களது வாரிசுகள் ஆகியோர் ம் பொதுவாக, 5 லிங்க்ஸ் அகல பாதையை நடந்துசெல்ல பயன்படுத்திகொள்ளலாமென்றும், மேலும், அதில் பூமிக்கடியில் பதிக்கப்பட்ட பைப்லைனில் மனுதாரர்/வாதி ஒரு நாளும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூட்டாக ஒரு நாளும், முறை வைத்து தண்ணீர் பாய்ச்ச உபயோகப்படுத்திகொள்ளலாமென்றும், ஒருவரது முறை நாளில், அவர் தண்ணீர் எடுத்துச்செல்வதை மற்ற தரப்பினர் இடையூறு செய்யவோ, பைப்லைனை சேதப்படுத்தவோ கூடாதென்று வரையறுக்கப்பட்ட இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்குவதற்காக முதல்நிலை வழக்கும், சமநிலை வாய்ப்பும் உள்ளது. இல்லாவிட்டால், இருதரப்புக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும்

சூழ்நிலை உள்ளது. எனவே, விசாரணை நீதிமன்றம் இந்த மனுவை முழுமையாக அனுமதித்தது சரியல்ல என்றும், எனவே, அது ரத்து செய்யத்தக்கதென்றும், அதன் தொடர்ச்சியாக, இந்த உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டு வழக்கு, மேற்கண்டவாறு பகுதியாக அனுமதிக்கத்தக்கதென்றும், இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மேற்கண்டவாறு மாற்றியமைத்து வழங்கத்தக்கதென்று **பிரச்சனை எண்கள் 1 முதல் 4** க்கு முடிவு செய்யப்படுகிறது.

14. **பிரச்சனை எண்.5:**

இந்த உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டு வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலை கருதி தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென இந்த பிரச்சனைக்கு முடிவு செய்யப்படுகிறது.

15. முடிவாக,

1. இந்த உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டு மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. அதன் தொடர்ச்சியாக, விசாரணை நீதிமன்றம் இ.ம. எண்.804/2017ல், அ.வ.எண்.183/2017ல் 6.1.2018 அன்று பிறப்பித்த உத்தரவு மற்றும் உத்தரவாணை ரத்து செய்யப்படுகிறது.

2. இம எண் 804/17 பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. நீதியின் நலன் கருதி, அசல் வழக்கு முடியும் வரை, 27.05.1982 ம் தேதியில் ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட தட பாத்திய உடன்படிக்கைபடி, 5 லிங்ஸ் அகல தடத்தை, அந்த ஒப்பந்தத்தில் கண்ட தரப்பினர்கள் மற்றும் அவர்களது வாரிசுகள் ஆகியோர் பொதுவாக, 5 லிங்க்ஸ் அகல பாதையை நடந்துசெல்ல பயன்படுத்திகொள்ளலாமென்றும், மேலும், அதில் பூமிக்கடியில் பதிக்கப்பட்ட பைப்லைனில்; மனுதாரர்/வாதி ஒரு நாளும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூட்டாக ஒரு நாளும், முறை வைத்து தண்ணீர் பாய்ச்ச உபயோகப்படுத்திகொள்ளலாமென்றும், ஒருவரது முறை நாளில், அவர் தண்ணீர் எடுத்துச்செல்வதை மற்ற தரப்பினர் இடையூறு செய்யவோ, பைப்லைனை சேதப்படுத்தவோ கூடாதென்று வரையறுக்கப்பட்ட இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவிடப்படுகிறது.

3. விசாரணை நீதிமன்றம், அசல் வழக்கை விரைந்து முடிக்க தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது.

4. இந்த உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டு மனுவிற்கான செலவுதொகையை தரப்பினர்கள் அவரவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2020ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/-பா.சரவணன்
சார்பு நீதிபதி
பெருந்துறை.

இருதரப்பு சாட்சிகள் மற்றும்
சான்றாவணங்களின் பட்டியல்
---

இல்லை

ஒப்பம்/-பா.சரவணன்
சார்பு நீதிபதி
பெருந்துறை.

நகல் பெறுநர் :

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பெருந்துறை.

Uploaded by M.U